**கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு**

# இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிறுவனம்

## தேயிலை ஆராய்ச்சி சபை

# வெற்றிடங்கள்

தலவாக்கலையிலுள்ள இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தில் உள்ள பின்வரும் பதவிகளுக்காக இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் அழைக்கப்படுகின்றன.

01. வதிவிடப் பொறியியலாளர்
    Resident Engineer
02. ஆராய்ச்சி அதிகாரி
    Research Officer
03. தொழில்நுட்ப அதிகாரி (ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி)
    Technical Officer (Research & Development)
04. தொழில்நுட்பவியல் அதிகாரி (சிவில்)
    Technological Officer (Civil)

### 01. வதிவிடப் பொறியியலாளர் (Resident Engineer)

**கடமை விபரம்**
சகல சிவில், மின்னியல் மற்றும் இயந்திரவியல் வேலைகளை வடிவமைத்தல் மற்றும் ஒட்டுமொத்த திட்டமிடுதல், மதிப்பீடு,நிர்மாணம், பராமரிப்பு என்பவற்றுக்கு பொறுப்பு கூறல்

**வெளிவாரி:**
அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பொறியியல் (சிவில்) இளமாணிப் பட்டம்.

மற்றும்

தகைமைக்குப் பின் மூன்று (03) வருடகால அனுபவம்
அல்லது

ஒரு NDT (சிவில்) சான்றிதழ் அல்லது பொறியியல் விஞ்ஞானத்தில் தேசிய டிப்ளோமா (NDES) அத்துடன் அரசாங்கம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார்துறை நிறுவனமொன்றில் சிவில் பொறியியலில் தகைமைக்குப் பின்னரான எட்டு (08) வருடகால அனுபவம்

**உள்வாரி:**
கனிஷ்ட முகாமைத்துவ வகுதியில் (JM 1-2) பொறியியல் உதவியாளராக (சிவில்) 1ஆம் தரத்தில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருடகால திருப்திகரமான சேவை

**சம்பள அளவு:**
MM 1-2 (2016) ரூபா 54, 550/- - 10x 1, 375- 15x 1, 910 - ரூபா 96, 950/- மாதாந்தம்

**வயது :** 22 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரிகள் தொடர்பில் உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

**தெரிவு செய்யும் வழிமுறை:** கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையொன்றின் ஊடாக தெரிவு மேற்கொள்ளப்படும்.

### 02. ஆராய்ச்சி அதிகாரி (Research Officer)

**கடமை விபரம்**
சிரேஷ்ட ஆராய்ச்சி அதிகாரி (SRO) முதன்மை ஆராய்ச்சி அதிகாரி (PRO) அல்லது பிரிவுத் தலைவர் (HOD) ஆகியோரின் வழிகாட்டுதலின் கீழ், ஆராய்ச்சித் திட்டங்களை அமுலாக்குதல், முடிவுகளை பகுப்பாய்வு செய்தல் மற்றும் தரவை வழங்குதல் மற்றும் தரவுகளை சேகரித்து பதிவுசெய்வதற்காக தொழில்நுட்ப, பரிசோதனை மற்றும் விரிவாக்கல் அதிகாரிகளுக்கு வழிகாட்டுதல் மற்றும் ஆராய்ச்சித் திட்டங்களை இணங்காணுதல் மற்றும் திட்டமிடுவதற்கு சிரேஷ்ட ஆராய்ச்சி அதிகாரி (SRO) முதன்மை ஆராய்ச்சி அதிகாரி (PRO) ஆகியோருக்கு உதவுதல்.

**வெளிவாரி:**
அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் பொருத்தமான பாடத் தெரிவுகளுடன் விவசாயம் அல்லது பொறியியல் / விஞ்ஞானத்தில் முதல் வகுப்பு அல்லது இரண்டாம் வகுப்பு மேல் பிரிவுடன் நான்கு (04) வருட கால விசேட பட்டம்

அல்லது

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் பொருத்தமான பாடக் கலவைகளுடன் விஞ்ஞானம் / விவசாயம் அல்லது பொறியியலில் இரண்டாம் வகுப்பு கீழ்ப் பிரிவுடன் நான்கு ஆண்டுகள் விசேட பட்டம் அத்துடன் தொடர்புடைய துறையில் குறைந்தபட்சம் ஒரு வருட (01) முதுகலைமானி தகைமை.
அல்லது

பொருத்தமான பாடக் கலவைகளுடன் விஞ்ஞானம் / விவசாயம் அல்லது பொறியியலில் ஒரு பட்டம் அத்துடன் தொடர்புடைய துறையில் குறைந்தபட்சம் இரண்டு வருட (02) முதுகலைமானி தகைமை.

**உள்வாரி:**
அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானம் / விவசாயம் அல்லது பொறியியலில் ஒரு பட்டம் மற்றும் ஆராய்ச்சி அதிகாரியாக ஆகக் குறைந்தது ஆறு (06) வருட திருப்திகரமான சேவை.

**சம்பள அளவு:** AR 1 (2016) (I) ரூபா 53,150 – 10 x 1,375 – 15 x 1,910 – ரூபா 95,550/- (மாதாந்தம்)

**வயது :** 22 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலுமிருத்தல் வேண்டும். உள்ளக அபேட்சகர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

**தெரிவு செய்யும் வழிமுறை:** எழுத்துமூல போட்டிப் பரீட்சை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை மூலம்.

### 03. தொழில்நுட்ப அதிகாரி (ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி) Technical Officer (Research & Development)

**கடமை விபரம்:**
நிறுவனத்தின் தொழில்நுட்பவியல் வேலைகள் மற்றும் முகாமைத்துவ வேலைகளுக்கான மேலதிக உதவிகளைச் செய்தல், தொழில்நுட்பவியல் சார்பான செயற்பாடுகளுக்கு வசதியேற்படுத்தல் போன்றவற்றுக்குப் பொறுப்புக் கூறல்.

**வெளிவாரி:**
மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்ப / தொழிற் பயிற்சி நிறுவனமொன்றினால் வழங்கப்பட்ட தேசிய தொழிற்றிறன் தகைமையில் (NVQ) 5ஆம் நிலைக்குக் குறையாத விஞ்ஞானம்/ கமத்தொழில் / பெருந்தோட்ட முகாமைத்துவத்தில் தேர்ச்சிச் சான்றிதழொன்றைப் பெற்றிருத்தல்.

**உள்வாரி:**
மேற்கூறிய வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தேவைப்பாடுகளைப் பெற்றிருத்தல்.

**சம்பள அளவு:** MA 2-2 (2016) ரூபா 30,310 – 10x300 – 7x350 – 4x600 – 20x710 - ரூபா 52,360.00

**வயது :** 18 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலுமிருத்தல் வேண்டும். உள்ளக அபேட்சகர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

**தெரிவு செய்யும் வழிமுறை:** எழுத்து மூலப் பரீட்சை மற்றும்/அல்லது ஒரு கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையொன்றின் மூலம்.

### 04. தொழில்நுட்பவியல் அதிகாரி (சிவில்) Technological Officer (Civil)

**கடமை விபரம்:**
நிறுவனத்தின் தொழில்நுட்பவியல் வேலைகள் மற்றும் முகாமைத்துவ வேலைகளுக்கான மேலதிக உதவிகளைச் செய்தல், தொழில்நுட்பவியல் சார்பான செயற்பாடுகளுக்கு வசதியேற்படுத்தல் போன்றவற்றுக்குப் பொறுப்புக் கூறல்.

**வெளிவாரி:**
மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்ப / தொழிற் பயிற்சி நிறுவனமொன்றினால் வழங்கப்பட்ட தேசிய தொழிற்றிறன் தகைமையில் (NVQ) 5ஆம் நிலைக்குக் குறையாத சிவில் தேர்ச்சிச் சான்றிதழொன்றைப் பெற்றிருத்தல்.

**உள்வாரி:**
மேற்கூறிய வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தேவைப்பாடுகளைப் பெற்றிருத்தல்.

**சம்பள அளவு:** MA 2-2 (2016) ரூபா 30,310 – 10x300 – 7x350 – 4x600 – 20x710 - ரூபா 52,360.00

**வயது :** 18 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலுமிருத்தல் வேண்டும். உள்ளக அபேட்சகர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

**தெரிவு செய்யும் வழிமுறை**: எழுத்து மூலப் பரீட்சை மற்றும்/அல்லது ஒரு கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையொன்றின் மூலம்.

**ஏனைய நன்மைகள்:**

i. இருப்பிட வசதி (முழுமையாக தளபாடமிடப்பட்ட விடுதி) வழங்கப்படும் அல்லது இருப்பிடத்திற்கான பதிலீட்டுப் படியொன்று வழங்கப்படும்.

ii. நிறுவனத்தின் மருத்துவத் திட்டத்தின் நடைமுறையிலுள்ள மருத்துவ வசதிகள் வழங்கப்படும்.

iii. **சேமலாப நிதி:** தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரி சம்பளத்தின் 10%ஐ ஊழியர் சேமலாப நிதிக்கு பங்களிப்புச் செய்யும்படி வேண்டப்படுவதுடன் நிறுவனமானது 15% (வீதத்தைச்) செலுத்தும். மேலும் நிறுவனமானது ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு 3% வீதத்தையும் பங்களிப்புச் செய்யும்.

iv. தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தினால் பதவிக்கு ஏற்புடைத்தான ஏனைய நன்மைகளும் வழங்கப்படும்.

பதவிகள் நிரந்தரமானவை. தேயிலை ஆராய்ச்சி நிலையத்தின் www.tri.lk எனும் இணையதளத்திற்குப் பிரவேசித்து google படிவத்தில் கோரப்பட்டுள்ள தகவல்களை பதிவேற்றம் செய்ய வேண்டும் என்பதுடன் பிறப்புச் சான்றிதழின் பிரதி, இயைபுடைய கல்வி மற்றும் ஏனைய தொழில்சார் தகுதிகள், சேவைச் சான்றிதழ்கள் மற்றும் புதுமையான திறன்கள் ஆகியவற்றுடன் முழுமையான சுய தரவை வழங்கும் விண்ணப்பம் மற்றும் விண்ணப்பதாரரின் திறன்களை மதிப்பிடக்கூடிய உறவினர் அல்லாத இரு நடுவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் சகிதம் **2024 ஆகஸ்ட் 12ஆம்** திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் கீழே முகவரியிடப்பட்டவருக்கு (பணிப்பாளர்) தபால் மூலம் அனுப்பவும். மேலும் விண்ணப்பிக்கும் பதவிப் பெயரை கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடவும்.

அரசாங்க சேவை/ அரச கூட்டுத்தாபனங்கள்/ நியதிச் சட்ட சபைகள் ஆகியவற்றின் ஊழியர்களின் விண்ணப்பங்கள் அவ்வாறான நிறுவனத் தலைவருடாகவே அனுப்பப்படல் வேண்டும். இவ்வாறான தேவைப்பாட்டிற்கு அமைந்தொழுகாத விண்ணப்பங்களை நிராகரிப்பதற்கு இது வழிவகுக்கும்.

**பணிப்பாளர் - பிரதான நிறைவேற்று அதிகாரி,**
**இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிறுவனம்,**
**சென் கூம்ஸ், தலவாக்கலை.**